1999ம் ஆண்டின் கூட்டு உடன்படிக்கை

இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999ம் ஆண்டின் கூட்டு உடன்படிக்கை

தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முறையாகப் பதிவு செய்யப்பட்டதும் 385, ஜே 3, பழைய கோட்டை வீதி, ராஜகிரியவில் அலுவலகத்தையுடையதும் (இதனகத்துப்பின்னர் "சம்மேளனம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) சங்கமாகிய இலங்கை, தொழில்தருநர் சம்மேளனத்துக்கும் (ஒரு பாகமாக)

அத்துடன் தொழிற் சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முறையாகப் பதிவுசெய்யப்பட்டதும், முறையே 72, ஆனந்தகுமாரசாமி மாவத்தை, கொழும்பு 7, 60, பண்டாரநாயகபுர, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிகட, ராஜகிரிய மற்றும் 618-1/2, காலி வீதி, கொழும்பு 3 ஆகிய இடங்களில் அலுவலகங்களையுடையதும் இதனகத்துப் பின்னர் "சங்கங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் கூட்டு பெருந்தோட்ட தொழிற் சங்க நிலையத்துக்குமிடையே (மற்றைய பாகமாக)

கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தினைப் பின்பற்றி, ஆயிரத்துத் தொளாயிரத:து தொண்ணூற்றெட்டாம் ஆண்டு திசெம்பர் மாதம் முதலாந் தேதி தொடக்கம் பயனுற வேண்டியதான ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றெட்டாம் ஆண்டு திசெம்பர் மாதம் நான்காந் தேதியன்று செய்து கொள்ளப்பட்டது இந்த உடன்படிக்கை.

திறத்தினர்களுக்கிடையே பின்வருமாறு இத்தால் இணங்கிக் கொள்ளப்படுகின்றதாவது:

பாகம் 1

1. **மேவப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் தொழில்தருநர்:**
இவ்வுடன்படிக்கை, இதற்கான முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்படும் எந்த சம்மேளனத்தின் தோட்டங்களில் சங்கத்தின் உறுப்பினர்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளார்களோ அந்த சம்மேளனத்தின் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

2. **மேவப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் ஊழியர்கள்**
இவ்வுடன்படிக்கை, இதற்கான முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்படும் எந்த சம்மேளனத்தின் உறுப்பினர்களால் இவ்வுடன்படிக்கையின் தேதியன்று தேயிலை உற்பத்தி மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திலும், அத்துடன் இறப்பர் உற்பத்தி மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திலும் சங்கத்தின் உறுப்பினர்கள் தொழிலுக்கமர்த்தப்படுள்ளார்களோ அவ்வுறுப்பினர்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

3. **முன்னைய உடன்படிக்கைகள்**
இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகள், ஏதேனும் முன்னைய உடன்படிக்கைகளை மேலோங்குதலும் பதிலீடு செய்தலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதுடன் இதனகத்துள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் இறுதியானவையாகவும் கருதப்படுதல் வேண்டும்.

4. நடைமுறைக்கு வரும் தேதியும், காலவளவும்

இவ்வுடன்படிக்கை ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு, திசெம்பர் மாதம் முதலாந் தேதியன்று முதல் பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன், ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு தொடர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒரு திறத்தினர் மற்றைய திறத்தினருக்கு ஒரு மாத அறிவித்தலை எழுத்தில் கொடுத்து, அதனை இரத்து செய்தாலேயன்றி அதன்பின்னரும் அது தொடர்ந்தும் வலுவிருத்தல் வேண்டும்.

அ) இதன் ஒரு திறத்தினர் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் தேதிக்கு முன்னர் அத்தகைய அறிவித்தலைக் கொடுத்தலாகாதென்பதுடன், அத்தகைய அறிவித்தல் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு நவம்பர் மாதம் முப்பதாம் தேதிக்கு முன்னர் முடிவுறுதலுமாகாது.

ஆ) இவ்வுடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்போது அது முடிவுறுத்தப்பட்டதாக இருக்கும்.

5. தொழிலின் நியதி நிபந்தனைகள்

இந்நடைமுறை உடன்படிக்கையின் நடைமுறைக் காலத்தின்போது, இணங்கிக் கொள்ளப்பட்ட தொழில் நியதி நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இருத்தலாகாது.

6. சம்பளங்களும் விலைப்பங்கு குறைநிரப்பியும்

சம்பளமும் விலைப்பங்கு நிறைநிரப்பியும் 1998 பெப்ரவரி மாதம் 13ஆந் தேதியிடப்பட்ட கூட்டு உடன்படிக்கைக்கிணங்கவும், இவ்வுடன்படிக்கையின் நடைமுறையின்போது சம்பளம் மற்றும் விலைப்பங்கு குறைநிரப்பியின் மீது செய்து கொள்ளப்பட்ட பின்னரான உடன்படிக்கைக்கிணங்கவும் செலுத்தப்படுதல் வேண்டுமென இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

7. மேலதிகநேர வேலை

வேலையாட்கள், முகாமைத்துவத்தால் அங்ஙனம் செய்யும்படி கோரப்படுவதன்மீது நியாயமான மேலதிகநேர வேலையைப் புரிதல் வேண்டும்.

8. வழங்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கையும் சம்பள முற்பணமும்

1) ஒரு தொழில்தருநர் கீழ்க் குறிப்பிடும் (VII) என்னும் வாசகத்தில் கூறப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர, ஒரு வருடத்தில் வருடாந்த லீவு, நியதிச்சட்ட ரீதியான விடுமுறைகள் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளித்தமைக்காக 10 நாட்கள் போனஸ் ஆகியன உள்ளிட்ட 300 நாட்களுக்கு வேலையை ஒரு வருடத்தில் வழங்குதல் வேண்டும். வேலையாள் வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும் அல்லது வேலை செய்வதற்குத் தயாராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் வேலை இருக்கும் எல்லா நாட்களையும் வேலை வழங்குதல் உள்ளடக்குதல் வேண்டும்.

ii) ஒரு தொழில்தருநர் நானாவித வேலையாட்கள் தவிர்ந்த எல்லா வேலையாட்களுக்கும் மேற்குறிப்பிட்ட (1)ஆம் வாசகத்துக்கமைவாக, ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கு வேலை வழங்குதல் வேண்டும். நானாவித வேலையாட்கள் எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட (1)ஆம் வாசகத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு வருடாந்தம் 300 நாட்கள் வேலை வழங்கப்பட உரித்துடையவர்களாதல் வேண்டும்.

III) பெப்ரவரி மாதத்திலும், ஒரு மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளையும் போயா தினங்களையும் கவனத்திற்கொள்ளும் போது வேறு மாதங்களிலும் உண்மையில் 25 நாட்கள் வேலை வழங்கப்படமுடியாதவிடத்து அப்போது அத்தகைய மாதத்தில் உண்மையில் வழங்கப்படக்கூடிய நாட்களே வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மேற்குறிப்பிட்ட (II)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட 25 நாட்கள் அல்ல.

IV) விடயத்திற்கேற்ப, மேற்கூறப்பட்ட (II) மற்றும் (III) ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினதான வேலை நாட்களை வழங்குவதற்கு தொழில் தருநருக்கு இயலாதவிடத்து, ஒரு மாதத்தில் அவருக்கு வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையில் 80% வருகையைக் கொண்டிருக்கும் வேலையாளுக்கு, ஒன்றில் 25 நாட்களுக்கான ஊதியத்தை அல்லது மேற்குறிப்பிட்ட (I), (II) மற்றும் (III)ஆம் பந்திகளுக்கிணங்க அம்மாதத்துக்கு இயைபான எண்ணிக்கையினதான நாட்களுக்கான ஊதியத்தை ஈடுசெய்யக்கூடியதாக முற்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(V) மேற்குறிப்பிட்டபடி (IV) ஆம் பந்தியின் கீழ் முற்பணம் ஒரு வேலையாளுக்கு செலுத்தப்படும்போது, விடயத்திற்கேற்ப அதனையடுத்துப் பின்வரும் வேறு மாதங்களில், மேற்குறிப்பிட்ட (1)ஆம் அல்லது (II)ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினதான நாட்களை வேலை வழங்குதல் எஞ்சியிருக்கும் இடத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாதத்துக்குச் செலுத்துமதியாகவுள்ள மேலதிக ஊதியங்களிலிருந்தும், வேறு கொடுப்பனவுகளிலிருந்தும் அத்தகைய முற்பணத்தை தொழில்தருநர் அறவிடுதல் வேண்டும்.

(VI) அடுத்துறும் மாதங்களில் வேலையாள் வருகைதராத காரணத்தினால் முற்பணம் அறவிடப்படமுடியாதவிடத்து, கம்பனியின் நிதியாண்டின் முடிவுக்கு முன்னர் முன்னெடுத்துச் செல்லப்பட்ட தொகை அறவிடப்படுதல் வேண்டும்.

(VII) 25 நாட்களுக்கான வேலைவழங்க அல்லது மேற்குறிப்பிட்ட (III)ஆம் பந்தியில் குறிப்பிட்டது போல வேலை வழங்கல் கம்பனியின் ஏதேனும் தோட்டத்தில் அல்லது பிரிவில் செய்யப்படக்கூடியதான வேலை வழங்குதலையும் உள்ளடக்குதல் வேண்டும். அத்தகைய வேலை கம்பனியின் ஏதேனும் தோட்டத்தில் அல்லது பிரிவில் வழங்கப்படுமிடத்து, அவசியமேற்படுமிடத்து போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(VIII) விபத்து அல்லது இயற்கை அனர்த்தங்களின் காரணமாக விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படும்போது, மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகளை மாற்றுவதற்கான அவசியமேற்படும்போது, தோட்ட முகாமைத்துவமும் தோட்ட செயற்பாட்டுக் குழுவும் அது தொடர்பில் பரஸ்பர சரிக்கட்டல்களைச் செய்தல் வேண்டும்.

9. வேலை செய்வதற்கான ஒழுங்குகள்

தோட்ட அதிகாரிகளுக்கு சங்க செயற்பாட்டுக் குழுவுக்குமிடையிலான கலந்துரையாடல் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆதரவளிப்பதற்குச் சங்கங்கள் உறுதியளித்தல்.

(I) முற்கூறப்பட்ட வாசகத்தினைப் பின்பற்றி தோட்டக் குழுக்களுடனான கலந்தாசோலசனையுடன் தோட்ட மட்டத்தில் வேறு பல்தரப்பட்ட இலக்குகள் கணிப்பிடப்படுதல் வேண்டும். இவ்விடயம் ஏதேனும் பிணக்கின் விடயத்தில் தோட்ட மட்டத்தில் கலந்துரையாடல் வேண்டுமென்பதுடன், தோட்ட மட்டத்தில் பிணக்கு தீர்க்கப்பட முடியாதவிடத்து, இதனகத்துள்ள நடபடிமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

(II) ஞாயிற்றுக்கிழமையில் அல்லது நியதிச்சட்டபடியான விடுமுறையொன்றில் புரியப்பட்ட வேலைக்காக, தொழில்தருநர் விதித்துரைக்கப்பட்ட சட்ட வீதத்தை
(உ-மாக) ஞாயிற்றுக்கிழமைக்கும் போயாவுக்கு தின வீதத்தின் 1 1/2 மடங்குகளையும், நியதிச்சட்டப்படியான விடுமுறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின வீதத்தின் இரு மடங்குகளையும் செலுத்துதல் வேண்டும். இந்தச் சம்பளம் கூடிய இலக்குகளுடன் தொடர்புப்படுத்தலாகாது.

10. கோப்பு மற்றும் தொடர்புற்ற விடயங்களும்

i) தொழிலில் இடமாறக்கூடிய தன்மை இருத்தல் பேணப்பட வேண்டுமென்பதுடன், ஊழியர்களது இணக்கத்துடனும், பரஸ்பரமாக இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளின்மீதும் ஊழியர்கள், ஒரு பிரிவிலிருந்து இன்னொன்றுக்கும், ஒரு கம்பனியிலிருந்து இன்னொன்றுக்கும் தொழிலுக்கமர்த்தப்படலாமென இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

II) தோட்டங்கள், தொழில் தேடும் எல்லா தகைமைபெற்ற பிள்ளைகளினதும் பதிவேடொன்றைப் பேணி வருதல் வேண்டும். வேலைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்போது, பதிவேட்டில் உள்ள முறையில் அவர்களுக்குத் தொழில் வழங்கப்படுதல் வேண்டும். பதிவேடு, சங்கங்களினால் பார்வையிடலுக்காக இயலச் செய்யப்படுதலும் வேண்டும். இரு பெற்றோரும் ஓய்வுபெற்றிருக்குமிடத்து அல்லது வதிவிட குடும்பமொன்றில் எவரும் தொழிலுக்கமர்த்தப்பட்டிராத விடத்து இவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

III) தோட்டமொன்றில் வழமையான வதிவிலுள்ள ஒரு நபரை மணம்புரிய வரும் மணவாட்டி, முன்னைய தோட்ட அதிகாரியிடமிருந்து அவரது வேலை அந்தஸ்தை அத்தாட்சிப்படுத்தும் ஒரு கடிதத்தை ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்குமிடத்து அவருக்கு திருமணத்துக்கு முன்னைய அதே அந்தஸ்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

IV) நிரந்தர மற்றும் நாட்கூலி ரீதியான ஊழியர்கள் இருக்க வெண்டுமேயன்றி, கைவேலை ஊழியர்கள் என்று ஒரு வகை இருத்தலாகாது. தோட்டங்களின் அதிகாரிகள் குறிப்புப் புத்தகங்களில் தொடர்ச்சியான பன்னிரெண்டு மாத கால தொழிலின் பின்னர், அவர்களது தோட்டங்களில் வேலையாட்களின் பதிவு செய்யப்பட முடியாதவர்களைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

11. அதிகப்படியான வீதங்கள்

அதிகப்படியான செலுத்துகையைப் பெறத் தகுதியுடைய வேலையாட்களுக்குச் செலுத்தப்பட கூடியதான வீதங்கள் 1997 ஜனவரி 1ஆந் தேதியிலிருந்து 14.9% த்தினால் மீளாய்வு செய்யப்பட்டதாதல் வேண்டும். இச்செலுத்துகைகள் பின்னர் சம்பள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளாய்வு செய்யப்படும்போது மீளாய்வு செய்யப்படும். இக்கணக்கு தொடர்பிலான நிலுவைகள் 1999, ஜனவரி 15ஆந் தேதிக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

12. வருகைக்கான போனஸ்

வேலையின்போது 75% தொடக்கம் 85% வரை வருகை தந்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 750/- ரூபா போனஸ் ஒன்றை வழங்குவதற்கு தொழில்தருநர் உடன்படுகிறார். வேலையின்போது வருகைதரல் 85% அல்லது அதற்கு மேற்படுமிடத்து, செலுத்துகை 850/- ரூபாவாதல் வேண்டும். இது 1999 தொடக்கம் பயனுடையதாதல் வேண்டும்.

13. சுகவீன விடுமுறை

அவரது வருடாந்த விடுமுறைக்குத் தகைமை பெறும் எவரேனும் ஊழியர் ஏதேனும் ஒரு நேரத்தில் 7 நாட்களுக்கு அல்லது அதற்கு மேல் மருத்துவமனையில் இருந்திருந்தால் மருத்துவ லீவுக்குத் தகுதியுடைவராதல் வேண்டும். அத்தகைய ஊழியர் முதல் 7 நாட்கள் உள்ளிட்ட 14 நாட்களை மிஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அரைநாள் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும். ஆயினும், எந்த வேலையாளும், இதனகத்துக்குறுத்துரைக்கப்பட்டபடி ஏதேனும் ஒரு வருடத்தில் 14 நாட்களை மிஞ்சும் வண்ணம் சம்பளத்துடன் மருத்துவ லீவுக்குரித்துடையராதல் ஆகாது. இந்நோக்கத்துக்காகச் செலுத்தப்படவேண்டிய வீதம், எந்த மாதத்தில் லீவு பெறப்பட்டதோ அந்த மாத்தில் ஏற்புடைத்தான சம்பளத்தின் வீதமாதல் வேண்டும்.

14. ஓய்வுபெறும் வயது

ஊழியர்களுக்கான ஓய்வுபெறும் வயது 60 ஆதல் வேண்டும். காலத்துக்கு முந்திய ஓய்வு ஊக்குவிக்கப்பட மாட்டாதென இணங்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

15. மகப்பேற்று நன்மைகள்

தகைமைபெறும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேற்று நன்மைக்காக கட்டளைச் சட்டத்தின்படி முழு மகப்பேற்று நன்மைக்கும் 1997 ஜனவரி 1ஆந் தேதி தொடக்கம் செலுத்தப்படும்.

16. வழமையான பழக்கங்கள்

வழமையான பழக்கங்கள், தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் மாற்றங்கள், தோட்ட மட்டத்தில், தோட்ட அதிகாரியும் தோட்ட குழுக்களினதும் இளைஞர் குழுக்களினதும் மற்றும் பெண்களின் குழுக்களினதும் தலைவர்களுக்குமிடையேயான கலந்தாலோசனைகளினாலும் அத்துடன் தாய்ச் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மட்டுமே பரஸ்பர இணக்கத்துடன் செய்யப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தொழிலாளர் முகாமைத்துவ உறவுகள்

தொழிலாளரும் முகாமைத்துவமும் இடைத்தொடர்பு கொள்ளக்கூடிய ஊடகம் தோட்டக் குழுக் குறிப்புப் புத்தகமாதல் வேண்டும். இதில் தோட்ட குழு, ஊழியர்களின் நாளாந்த பிரச்சினைகளைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் தோட்ட அதிகாரிகள் குறிப்புப் புத்தகத்தின் பதிவுகளுக்கு அது சமர்ப்பிக்கப்பட்ட 10 நாட்களுக்குப் பிந்தாமல் ஊழியர்களின் இன்னல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சாத்தியமாகக்கூடிய நோக்குடன் பதிலளித்து ஒரு தமிழ் மொழிபெயர்ப்புடன் சேர்த்து தோட்டக் குழுவுக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

ஊழியர்களில் கூட்டுறவைத் தேவைப்படுத்தக் கூடிய எவையேனும் விசேட பிரச்சனைகள் முகாமைத்துவத்துக்கு இருக்குமிடத்து, வேலையாட்களுடன் தொடர்பு கொள்வதற்காகவும் தோட்ட அதிகாரி இக்குறிப்புப் புத்தகத்தைப் பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு தோட்ட முகாமைத்துவத்துக்கும் இதனகத்துத் திறதினர்களாகவுள்ள சங்கங்களின் சங்க செயற்பாட்டுக் குழுவுக்குமிடையில் இரு வாரங்களுக்கொரு தடவை கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடைபெறுதல் வேண்டும். இக்கலந்தாலோசனைக் கூட்டங்களில் ஊழியர்களின் இன்னல்கள், உற்பத்தித் தன்மை, வேலை ஒழுங்குகள், இலக்குகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலன்புரி அத்துடன் வேலை தொடர்பிலான ஏனைய விடயங்களைக் கலந்தாலோசிக்கப்படல் வேண்டும். அத்தகைய கூட்டங்களின்போது முகாமைத்துவம், சங்கத் தலைவர்களுக்கு இருக்கை வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும்.

18. ஒழுக்காற்று நடடிவக்கை

ஒரு தொழில்தருநர், ஊழியருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்க உத்தேசிக்குமிடத்து, பின்வரும் நடபடிமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

i) பிறழ்நடத்தைச் செயல் ஒன்று தோட்ட அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமிடத்து, சொல்லப்பட்ட செயல் தொடர்பிலான பதிலொன்று தோட்ட தொழிலாளர் நாட்காட்டியில் செய்யப்படுதல் வேண்டும்.

ii) தோடட அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டஓர் அலுவலர், அதன் பின்னர் அவசியமெனக் கருதும் புலனாய்வொன்றைச் செய்தல் வேண்டும்.

iii) அத்தகைய முதனிலைப் புலனாய்வத் தீர்ப்பின் அடிப்படையில், தோட்ட அதிகாரி, தோதானவிடத்து, சிறிய பிறழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தைக்காகக் குற்றவாளியாகக் காணப்படும் ஓர் ஊழியருக்கு எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பலாம். 3 அல்லது அதற்கு மேற்பட்ட பிறழ் நடத்தைச் செயல்களுக்காக அத்தகைய எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளவிடத்து தோட்ட அதிகாரி சம்பளமிலாது ஊழியரை 3 நாட்களுக்கு நிறுத்தி வைக்கலாம். எச்சரிக்கைக் கடிதங்கள் சங்கத்தின் மாவட்ட அலுவலகத்தின் அவதானத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

IV) முதனிலைப் புலனாய்வின் தீர்ப்பின்போது தோட்ட அதிகாரி, சம்பந்தப்பட்ட பிறழ்நடத்தை

அ) தொழில் முடிவுறுத்தலை அல்லது சம்பளமில்லாது நிறுத்தி வைத்தல் மூலமான தண்டனையை நியாயப்படுத்துகிறதென; அல்லது

ஆ) விடயம் மேலும் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென அபிப்ராயப்படுமிடத்து, சம்பந்தப்பட்ட ஊழியருக்கு அவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை எழுத்தில் கொடுத்து ஒரு உள்ளக விசாரனை நடத்தப்படுமென்பதையும் அறிவித்தல் வேண்டும்.

V) சம்பந்தப்பட்ட ஊழியர், விசாரனை நடைபெறவதற்கு ஆகக் குறைந்தது 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் விசாரனையின் தேதி, நேரம் மற்றும் இடம் பற்றி எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

VI) உள்ள விசாரனை பற்றி அறிவிக்கப்பட்ட பின்னர் ஓர் ஊழியர் அத்தகைய விசாரனையின் ஏதேனும் நாளில் வருகைதரத் தவறுமிடத்து, தோட்ட அதிகாரி அத்தகைய விசாரனைக்கான வேறு ஒரு திகதியை எழுத்தில் அவருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் தோட்டக்குழுவுக்கு ஒரு பிரதியையும் அனுப்புதல் வேண்டும். பின்னைய அத்தேதியில், வேலையாள் வராமை எது எப்படியிருப்பினும் விசாரனை தொடரும். எவ்வாறாயினும் இங்ஙனம் விசாரனை செய்யப்படுவதற்கு வேலையாள் தோட்ட மருத்துவத் அலுவலரிடமிருந்து தாம் விசாரனைக்கு சமூகமளிக்க முடியாமை பற்றி மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்கப்படாது இருத்தல் வேண்டும்.

VII) அத்தகைய விசாரனையில், ஊழியர் சாட்சியளிக்கலாமென்பதுடன், தமது சார்பில் சாட்சியமளிக்க சாட்சிகளையும் அழைப்பிக்கலாம். தொழில் தருநரால் அல்லது அவரது சார்பில் அழைப்பிக்கப்பட்ட ஏதேனும் சாட்சியைக் குறுக்கு விசாரனை செய்வதற்கும் அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII) எந்த ஊழியருக்கெதிராக விசாரனை நடைபெறுகின்றதோ, அத்தகைய விசாரனையின் முடிவை எதிர்நோக்கி அவ்வூழியர் சம்பளமில்லாது நிறுத்தப்பட்டிருக்குமிடத்து தொழில் தருநருக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமான காலதாமதம் தவிர்த்து உள்ளக விசாரனை, அது ஆரம்பித்த முதல் நாட்களின் அமர்விலிருந்து 30 நாட்களுள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஊழியருக்கு, அத்தகைய விசாரனையின் தீர்ப்பையும் ஏதேனும் தண்டனையையும் (அங்ஙனம் இருப்பின்) விசாரனையின் முடிவில் பின்னர் 10 நாட்களுக்கான ஒரு காலப்பகுதியினுள் அறிவித்தல் வேண்டும்.

IX) அ) (VIII)ஆம் பந்தியில் எடுத்துக்காட்டப்படுள்ள கால வரையறைக்குள் செயற்பட தொழில்தருநர் தவறுமிடத்து, நிறுத்தி வைக்கப்பட் ஊழியருக்கு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவின் பின்னர் வேலை வழங்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய வேலை வழங்கல் உள்ளக விசாரனையைத் தொடர்ந்ததற்கு அல்லது இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும், தண்டனையை எவ்விதத்திலும் எதிராகப் பாதிக்கதலாகாது. குற்றவாளியாகக் காணப்படாவிடின், வேலையாள் வேலையில்லாதிருந்த காலப்பகுதிக்குச் சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய வேலை வழங்கல் உள்ளக விசாரனையைத் தொடந்தற்கு அல்லது இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும், தண்டனையை எவ்விதத்திலும் எதிராகப் பாதிக்கதலாகாது. குற்றவாளியாகக் காணப்படாவிடின், வேலையாள் வேலையில்லாதிருந்த காலப்பகுதிக்குச் சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆ) நிறுத்தி வைக்கப்பட்ட தேதியலிருந்து 60 நாட்கள் முடிவுற்ற தன் பின்னர் விசாரனை செய்யப்பட்டு வரும் விடயம் தொடர்பில் இறுதி முடிவு காணப்படாதவிடத்து, அது தொடர்பில் மேலும் எந்த நடபடிகளோ அல்லது நடடிவக்கைகளோ எடுக்கப்படுதலாகாதென்பதுடன், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காலத்துக்காக அவரது சம்பளமம் அவருக்கு மீளக்கொடுக்கப்படல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட ஊழியர் காரணமில்லாது வருகைதராத காரணத்தினால் விசாரனை தாமதிக்கப்படுமிடத்து இது ஏற்புடையதாதலாகது.

X) உள்ளக விசாரனைகள் தோடட அதிகாரியால் அல்லது கம்பனி நிர்வாகியினால் நடாத்தப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட அதிகாரி விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்குமிடத்து கம்பனி நிர்வாகி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வெளியாள் ஒருவர் விசாரனையை நடாத்தல வேண்டும்

XI) வாசகங்கள் IV தொடக்கம் X வரையில் எடுத்துக்காட்டப்பட்ட நடபடிகள் பின்வருவன தொடர்பில் ஏற்புடையனவாகா

அ) ஊழியரின் தொழிலை முடிவுறுத்துவது உள்ளிட்ட தண்டனையைத் தீர்மானிக்கக்கூடிய தோட்ட அதிகாரியினால் நேரடியாக பார்வையிடப்பட் ஏதேனும் பிறழ்நடத்தை தொடர்பில்;

ஆ) கடும் பிறழ்நடத்தை ஏற்படும் பட்சத்தில் தொழில்தருநர் அத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் சேவைகள் உடனடியாக முடிவுறுத்துவதற்கான உரித்தைக் கொண்டுள்ளார்.

XII) கற்ற உறவுமுறைகளின் அக்கறையில், ஒரு தொழில்தருநர், ஒரு குற்றவியல் தவறு தொடர்பற்றவிடத்து விடயத்தைப் பொலிசுக்கு ஆற்றுப்படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும்.

19. இன்னல் / பிணக்கு நடைமுறை

தொழில் தருநர், தோட்டக் குழுவிடமிருந்து, வாரந்தோறும் குறிப்புப் புத்தகத்தைப் பெறுவதற்கு ஒழுங்குசெய்தல் வேண்டுமென்பதுடன், அங்ஙனம் பெறப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குப் பிந்தாமல் ஒரு முறையான மொழி பெயர்ப்புடன் தனத எழுத்திலான மறுமொழியையும் செய்தல் வேண்டும்.

I) ஒரு தோட்டத்தைப் பொறுப்பான தோட்ட அதிகாரி அல்லது /அத்துடன் உதவித் தோட்ட அதிகாரி வாரந்தோறும் "தோட்டத் தொழிலாளர் தினத்தை நடாத்துதல் வேண்டும். தகவலை வழங்கும் நோக்கத்துக்காக பணியாட்டொகுதி உறுப்பினர்கள் பிரசன்னமாகவிருக்கலாம்.

II) ஊழியர்களின் இன்னல்கள் / பிணக்குகள் தோட்டத் தொழிலாளர் நாளில் குறிப்புப் புத்தகத்தினூடாகத் தொடர்பு கொள்வதன் மூலம் தோட்ட அதிகாரிக்கு அல்லது உதவித் தோட்ட அதிகாரிக்கு கொணரப்படலாம்.

III) தோட்டத் தொழிலாளர் நாளில் தோட்ட அதிகாரியின் கவனத்துக்கு கொணரப்பட்ட ஏதேனும் இன்னல் / பிணக்கு, தொழிலாளர் நாட்காட்டியில் பதிவு செய்யப்படுமென்பதுடன் தோட்ட அதிகாரி, அத்தகைய கருமம் அவரது கவனத்துக்குக் கொணரப்பட்ட நாளிலிருந்து 7 நாட்கள் முடயமுன்னர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனையான விடயம் தொடர்பிலான அவரது முடிவை குறிப்புப் புத்தகங்களின் ஊடாக சம்பந்தப்பட்ட ஊழியருக்கு / ஊழியர்களுக்கு அறிவித்தலும் வேண்டும்.

IV) ஒரு இன்னல் / பிணக்கு முகாமைத்துவத்துடன் அவசர கருமமொன்றாக எடுக்கப்படவேண்டியுள்ளவிடத்து, உடனடியாக அந்தக் கருமத்தை வாரத்தின் ஏதேனும் நாள் ஒன்றில் தோட்ட அதிகாரியின் கவனத்துக்கு சங்கத்தினூடாக கொண்டுவரல் வேண்டும். அங்ஙனம் எடுக்கப்பட்ட கருமம் தொடர்பில் தோட்ட அதிகாரி இயலக்கூடியளவு விரைவில் அவரது முடிவினை தோட்ட சங்கத் தலைவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

V) இன்னல் / பிணக்கு தொடர்பிலான தோட்ட அதிகாரியின் முடிவு ஏற்றுக்கொண்ணப்படாதவிடத்து அல்லது தோட்ட அதிகாரி ஒரு முடிவை அறிவிக்கத் தவறுமிடத்து, சங்கத்தின் தலைவர் மாவட்டத்திலுள்ள சங்கப் பிரதிநிதிக்கு கருமத்தை அறிக்கையிடலாம். அவர் அதனை முகாமைத்துவத்துடன் உள்ளூர் அல்லது பிராந்திய மட்டத்தில் எடுத்தல் வேண்டும்.

VI) உள்ளூர் அல்லது பிராந்திய மட்டத்தில் கலந்தாலோசனையின் பின்னர் 14 நாட் காலப்பகுதியினுள் ஒரு தீர்வு காணப்பட முடியாதவிடத்து, பிணக்கிலுள்ள கருமம் சம்பந்தமாகச் சங்கத்தினால் முகாமைத்துவக் கம்பனிக்கு அல்லது அதன் பிரதிநிதிக்கு தாய்ச் சங்கத்தினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

VII) கம்பனி மட்டத்தில், பிணக்கிலுள்ள கருமம் தீர்க்கப்படாவிட்டால், சங்கம் இணக்கத்தினால் தீர்வொன்றுக்கு வரும் முயற்சியாக தொழிற்றிணைக்களத்துக்குத் தனது முறைப்பாட்டைச் செய்யலாம். தொழிற்றிணைக்களம் தீர்வொன்றுக்கு வர இயலாவிட்டால், தீர்க்கப்பட்டுள்ள பிணக்கு கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தன்னிச்சையான நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென திறத்தினங்கள் இணங்கிக்கொள்கின்றனர். அத்தகைய ஒவ்வொரு நடுத்தீர்ப்பும், தொழில்தருநரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவரும் சம்பந்தப்பட்ட ஒரு சங்கம்/சங்கங்கள் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒருவரும், கூட்டாகப் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவருமான மூன்று நபர்களைக் கொண்ட ஒரு குழாமுக்குப் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனும் காரணத்துக்காக, இரு திறத்தினரும் பக்கச்சார்பற்ற நடுத்தீர்ப்பாளரை நியமிப்பதில் இணங்காவிட்டால் தொழில் ஆணையாளர் பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுதல் வேண்டும். பக்கச் சார்பற்ற நடுத்தீர்ப்பாளர் குழுமத்தின் தலைவராக இருத்தல் வேண்டும்.

நடுத்தீர்ப்பாளர்களின் அளிப்பு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டுமென்பதுடன், இரு திறத்தினரும் அதைக் கௌரவித்தல் வேண்டுமென திறத்தினரால் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

VIII) மேற்கூறப்பட்ட இன்னல் நடைமுறை பின்பற்றப்படாதவிடத்து அத்தகைய மீறுகைக்கும் குற்றவாளியாகும். தொழில்தருநர் / ஊழியர் பிறழ்நடத்தைக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

20. கைத்தொழிற் தொடர்புகள்

1) இவ்வுடன்படிக்கை வலுவில் தொடர்ந்திருக்கும்போது, சங்கங்கள், இவ்வுடன்படிக்கையினால் மேவப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஏதேனும் வேலை நிறுத்தத்தில் அல்லது வேறு விதமான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதில்லையென இணங்கிக் கொள்ளகின்றன. எவ்வாறாயினும் சங்கங்கள் உடன்படிக்கையின் ஏதேனும் மீறலொன்றின் பட்சத்தில் சம்மேளனம் மற்றும் தொழில்தருநருக்கு 14 நாட்கள் அறிவித்தல் கொடுத்தபின்னர். ஏதேனும் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையைத் தங்களுக்கு ஒதுக்கிக் கொள்கின்றன.

II) சங்கம், இவ்வுடன்படிக்கையினால் மேவப்படாத ஒரு கருமம் தொடர்பில் சம்மந்தப்பட்ட தொழில்தருநருக்கும் சம்மேளனத்துக்கும் 30 நாட்கள் எழுத்திலான அறிவித்தலைக் கொடுப்பதற்கு அமைவாக, இவ்வுடன்படிக்கையினால் மேவப்பட்ட ஒரு தொழில்தருநருக்கெதிராக தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கலாம்.

III) மேற்கூறப்பட்ட 1) மற்றும் II) என்னும் பந்திகளில் நியதிகளில் தவிர்த்து, இவ்வுடன்படிக்கையினால் மேவப்பட்ட ஒரு தொழில்தருநருக்கெதிராக ஏதேனும் வேலை நிறுத்தத்தை அல்லது வேறு விதமான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளப்படுவதிலலையென்று சங்கங்கள் பொறுப்பேற்கின்றன.

IV) இதன் (I) அல்லது (II) ஆம் பந்திகளின் நியதிகளில் ஏதேனும் வேலை நிறுத்தம் அல்லது வேறுவிதமான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின், அத்தகைய வேலை நிறுத்தம் அல்லது வேறுவிதமான தொழிற்சங்க நடவடிக்கை அத்தியாவசிய சேவைகளைப் பாதிக்காது இருப்பதைச் சங்கங்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் II

1. **தலைவர்கள் / பேச்சாளர்கள் / குழுக்கள்**
தலைவர்கள், பேச்சாளர்கள், மற்றும் குழுக்கள் அவர்கள் உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே ஒரு தோட்டத்தில் அல்லது அதன் பிரிவல் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆள்எவரும், அவர் ஒரு சங்கத்தின் உறுப்பினராகவிருந்தாலேயன்றி, அதனைப் பிரதிநிதித்துவப்படுத்த உரித்துடையவராதலாகாது.

எந்தத் தலைவரோ அல்லது சங்க உறுப்பினரோ, உறுப்பினர் அல்லாத ஒருவரைப் பிரதிநித்துவப்படுத்த முடியாது.

II) **விருப்பக் கழிவு**

அ) சம்மேளனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் விருப்பக்கழிவு முறையில் சேகரிக்கப்பட்ட சங்க சந்தாப்பணத்தை முறையேயான சங்க தலைமையலுவலகத்துக்கு, அத்தகைய சந்தாப்பணங்கள் எந்த மாதத்துக்குச் சேகரிக்கப்பட்டுள்ளனவோ, அந்த மாதத்தை அடுத்துறும் மாதத்தின் 25ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், அனுப்பி வைத்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடும் 3)ஆம் பந்தியில் ஏற்பாடுகளுக்கமைவாக தோட்ட அதிகாரி அமைப்பு தொகைகளைப் பிடித்து வைத்தலாகாது.

ஆ) 1. சங்க சந்தாப்பணங்களைக் கழிப்பனவு செய்தல் தொடர்பான விருப்பக் கழிவு படிவங்கள், ஒவ்வொரு ஆண்டின் யூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் மட்டும் ஒவ்வொரு ஊழியரிமிருந்து அல்லது குடும்பத்தலைவரிடமிருந்து தனிப்பட் முறையில் தொழில்தருநரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. விருப்பக்கழிவு படிவங்கள், தோட்ட அதிகாரிக்கு அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளுக்கு, தோட்ட அதிகாரியினால் குறித்துரைக்கப்படும் தேதிகளில் தொழிலாளர் வந்து சேருமிடத்தில் கையளிக்கப்படுதல் வேண்டும்.

3. சங்க சந்தாப்பாணங்களை நிறுத்துதல் தொடர்பிலான படிவங்கள் ஒவ்வொரு ஊழியரிமிருந்தும் தனிப்பட்ட முறையில் வருடத்தின் எந்நேரத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும். கைமீட்கப்படுவதற்காகப் பயனுறும் தேதிகள் கைமீட்கப்படுவதற்கான அறிவித்தலின் பின்னர் முடிவுறும் ஒரு கலண்டர் மாதத்தின் பின்னராகும்.

4. தொழில்தருநர், எக்காரணத்துக்காகவேனும், சேகரிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க சந்தாப்பணங்களை சங்க தலைமையலுவலகத்திற்கு அவற்றை அனுப்பிவைக்காமல் பிடித்து வைத்தலாகாது.

5. சங்க சந்தாப்பணங்கள் நாட்சம்பள ஊழியர்களிடமிருந்து இக்கழிப்பனவுகள் அவர்களால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பின்னர் கழிக்கப்படுதல் வேண்டும்.

III) **கருத்தரங்குகள் / வேலைக்களங்கள்**

தொழில்தருநர், ஒரு வருடத்தில் 2 தடவைகளிலும் ஐந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியிலும் சங்க அல்லது ஐ. எல். ஓ. வினால் நடாத்தப்படும் கருத்தரங்களுக்கும் வேலைக்களங்களுக்கும் சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒன்றுக்கு மேற்படாத தோட்டமட்ட சங்கப் பிரதிநிதிகளுக்கு சம்பளத்துடன் கூடிய நேரத்தை வழங்குதல் வேண்டும்.

2. இவ்வுடன்படிக்கையின் பொருள் விளக்கம்

இவ்வுடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான பொருள் விளக்கத்தில் சம்மேளத்துக்கும் சங்கம் / சங்கங்களுக்கிடையில் ஏதேனும் பிணக்கு ஏற்படும் பட்சத்தில், அத்தகைய பிணக்கு, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் நியதிகளின்படி தொழில் ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. பொருள் விளக்கம்

கிளைச் சங்கம் - கூட்டு உடன்படிக்கையினால் மேவப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் சங்கத்தின் / சங்கங்களின் கிளைச் சங்கம்.

நாட்சம்பள ஊழியர் - நாட்சம்பள ஊழியர் என்பது பதிவுசெய்யப்படாத ஊழியரான ஒரு நபராகும்.

விருப்பக் கழிவு - ஊழியரின் வேண்டுகோளின்படி ஒரு வேலையாளினால் அவரது ஒருப்பாட்டுடன் அவரது சம்பளத்திலிருந்து சங்கத்துக்கு செலுத்தப்பற்பாலதான சந்தாப் பணங்களைக் கழிப்பனவு செய்யும் தொழில்தருநரின் செயல்.

பிணக்கு - கைத்தொழில் பிணக்குகள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர் - இவ்வுடன்படிக்கையினால் மேவப்பட்டும் கட்டுப்பட்டுமுள்ள ஓர் ஊழியராகும்.

அத்தியாவசிய சேவைகள் - மருத்துவச் சேவைகள் காவலாளிகள், நாற்றுமேடைத் தொழிலாளர்கள், தபால் தொழிலாளர்கள், குடிமனை பெருக்குவோர், சமையல்காரர், சிறுபிள்ளை பராமரிப்பு நிலை, கவனிப்பாளர், மின்வலு உற்பத்தி மற்றும் நீர் விநியோகத் தொழிலாளர், பங்களா காப்பாளர்கள், அறுவடை செய்யப்பட்ட இலையையும் எடுத்த பாலையும் பதப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட வேலையும் அவற்றை அனுப்புதலும்.

அதிகப்படியான வீதங்கள் - குறித்துரைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாரம்பரியமாகச் செய்யப்படும் மேலதிகக் கொடுப்பனவுகள்

கைத்தொழில் பிணக்குகள் சட்டம் - 1950ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்

தோட்ட அதிகாரி - "தோட்ட அதிகாரி" என மேலே குறிப்பீடு செய்யப்படுவது கம்பனியால் நியமிக்கப்படும் எவரேனும் அதிகாரமளிக்கபட்ட நிர்வாகியைக் குறிக்குமென்பதுடன் அவரை உள்ளடக்கவும் செய்யும்.

சங்க செயற்பாட்டுக்குழு - தோட்டக்குழு, இளைஞர் குழு மற்றும் பெண்களின் குழு ஆகியவற்றின் தலைவர்களைக் கொண்டதாதல் வேண்டும்.

சங்கம்/சங்கங்கள் - இக்கூட்டு உடன்படிக்கையினால் மேவப்பட்டும்கட்டுப்படுத்தவும்பட்டுள்ள ஒரு சங்கம் / சங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் - ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை

இதற்கு அத்தாட்சியாக ஆயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாலாந் தேதியாகிய இன்று கொழும்பில் மேற்சொல்லப்பட்ட திறத்தினர் தத்தமது கையொப்பங்களை இட்டனர்

.....

ஈ. எல். ஜி. அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொழில்தருநர்
சம்மேளனம்

.....

எஸ். தொண்டமான் பா.உ.
தலைவர்
இலங்கைத் தொழிலாளர்
காங்கிரஸ்

.....

ராஜா செனிவிரத்ன
பொதுச் செயலாளர்
இலங்கை தேசிய தோட்டத்
தொழிலாளர் சங்கம்

.....

பி. வி. கந்தையா
பொதுச் செயலாளர்
கூட்டு பெருந்தோட்ட
தொழிற்சங்க நிலையம்

சாட்சிகள்

.....

ஜே. எஸ். ரத்வத்த
தவிசாளர்
பெருந்தோட்டச் சேவைகள்
தொழில்தருநர் தொகுதி

.....

ஹரி சந்திரசேகர
செயலாளர் (ஐ. ஆர்)
இலங்கைத் தொழிலாளர்
காங்கிரஸ்

.....

எம். ஜே. சி. அமரசூரிய
தவிசாளர்
இணக்கப் பேச்சுவார்த்தைக்
குழு

.....

எம். எஸ். ஏ. ஏச். மொகிடீன்
நிர்வாகச் செயலாளர்
இலங்கை தேசிய தோட்டத்
தொழிலாளர் சங்கம்

.....

ஜயரத்ன மலியகொட
தலைவர்
கூட்டு பெருந்தோட்ட தொழிற்சங்க நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE PRESTIGE PRINTER, COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org